சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.99/2018</u>

14.11.2025

வா.சா.1 திருமதி. ஆர்த்தி, க/பெ. யுவராஜ்

**<u>மறு குறுக்கு விசாரணை</u>**

வா.சா.ஆ.16 முதல் 25 வரையான ஆவணங்கள் குறித்து பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிராதில் சொல்லாத ஆவணங்கள் குறித்து பின்னிட்டு தாக்கல் செய்த வா.சா.ஆ.16 முதல் 25 வரையான ஆவணங்கள் எற்புடையதல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டடப்படும் வா.சா.ஆ.16 ஆவணத்தில் தபால் நிலைய முத்திரை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 ஆவணம் எந்த அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டது என்பதற்காக முத்திரை எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18, 19 ஆவணங்களில் எந்த சர்வே எண்ணுக்கு வழங்கப்பட்டது என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்தக் காலத்தில் சர்வே எண் குறிப்பிடமாட்டார்கள். சர்வே எண் போடுவார்கள் என்றாலும் நான் தற்போது வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.21 ஆவணம் என் தகப்பனாருக்கு பகலில் கண் தெரியும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.22, 23, 24, 25 ஆகிய ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எந்தக்காலத்திலும் எங்கள் அனுபவத்தில் இல்லை என்பதால் விளம்புகை மற்றும் சுவாதீனபரிகாரம் கோராமல் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருப்பது கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் திருச்சியில் தனியார் மருத்துவமனையில் வேலை பார்க்கிறேன் என்றாலும், எனக்கு நிரந்தர முகவரி திருச்சியில் உள்ளது என்றாலும், நான் அடிக்கடி என் தகப்பனார் ஊரான வண்டாம்பாளைக்கு வந்து செல்வேன். தாவா சொத்து எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.